**செய்தி வெளியீடு எண்: 717** **நாள்: 28.11.12**

<u>செய்தி வெளியீடு</u>

மதச்சார்பற்ற கொள்கைகளை தொடர்ந்து பின்பற்றுவதோடு மட்டுமல்லாமல், சிறுபான்மையினரின் நலன் காத்திடும் வகையிலும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் தலைமையிலான அரசு செயல்பட்டு வருகிறது.

சமீபத்தில் தீபாவளித் திருநாளில், நடிகர் விஜய் நடிப்பில் தமிழகத்தில் வெளியான 'துப்பாக்கி' என்னும் திரைப்படத்தில் இஸ்லாமிய சமுதாய மக்களுக்கு எதிரான காட்சிகள் இடம் பெற்றுள்ளதாகவும், இக்காட்சிகள் உடனடியாக நீக்கப்பட வேண்டும் எனவும் இஸ்லாமிய அமைப்புகள் கோரின. இதனை அறிந்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், தமிழக அரசின் உள்துறை செயலாளருக்கு அளித்த உத்திரவினையடுத்து, அரசு உள்துறை செயலாளர், திரைப்படத்தின் நடிகர் திரு விஜய், இயக்குநர் முருகதாஸ், தயாரிப்பாளர் தாணு, நடிகர் விஜய்யின் தந்தை சந்திரசேகரன் ஆகியோரை 15.11.2012 அன்று அழைத்து, திரைப்படத்தில் இஸ்லாமிய சமுதாய மக்களின் மனம் புண்படும்படி உள்ள காட்சிகளை தவிர்க்கும்படியும், இது சம்பந்தமாக இஸ்லாமிய சமூக அமைப்புகளை சார்ந்தவர்களுடன் பேசும்படியும் அறிவுறுத்தினார்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் உடனடி நடவடிக்கையினால் துப்பாக்கி படக்குழுவினர், இஸ்லாமிய அமைப்புகளின் பிரதிநிதிகளுடன் விவாதித்து, திரைப்படத்தில் இடம் பெற்றிருந்த குறிப்பிட்ட சில காட்சிகளை நீக்கினார்கள்.

இதனைத் தொடர்ந்து, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களை தமிழ்நாடு இஸ்லாமிய இயக்கங்கள் மற்றும் அரசியல் கட்சிகளின் கூட்டமைப்பினர் இன்று (28.11.2012) தலைமைச் செயலகத்தில் நேரில் சந்தித்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எடுத்த விரைவு நடவடிக்கையினால், இஸ்லாமிய சமுதாயத்தை பற்றிய சர்ச்சைக்குரிய காட்சிகள் திரைப்படத்திலிருந்து நீக்கப்பட்டதற்கு, தங்களது நன்றியினை தெரிவித்துக் கொண்டனர்.

இந்தச் சந்திப்பின்போது மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை அமைச்சர் திரு. அ. முஹம்மத் ஜான், தலைமைச் செயலாளர் திரு.தேபேந்திரநாத் சாரங்கி, இ.ஆ.ப., தமிழ்நாடு இஸ்லாமிய இயக்கங்கள் மற்றும் அரசியல் கட்சிகளின் கூட்டமைப்பின் ஒருங்கிணைப்பாளர் திரு.A.K.மொகமது ஹனீபா, தமிழ்நாடு மாநில ஜமாத்துல் உலமா சபைத் தலைவர் திரு.A.E.M.அப்துல் ரஹ்மான் மிஸ்பாஹி, தமிழ்நாடு முஸ்லிம் முன்னேற்றக் கழக பொதுச் செயலர் திரு.P.அப்துல் சமது, ஜமாத்தே இஸ்லாமி ஹந்த் பொதுச் செயலாளர் திரு.M.A.முஹம்மது அனிபா மன்பயி, பாப்புலர் ஃபிரண்ட் ஆஃப் இந்தியா தலைவர் திரு.A.S.இஸ்மாயில், இந்திய தவ்ஹீத் ஜமாஅத் தலைவர் திரு.S.M.பாக்கர், சோசியல் டெமாக்ரடிக் பார்ட்டி ஆஃப் இந்தியா பொதுச் செயலாளர் திரு.அப்துல் ஹமீது, மனித நேய மக்கள் கட்சி தலைவர் திரு.M.H.ஜவாஹிருல்லா,M.L.A., தேசிய லீக் தலைவர் திரு.M.பஷீர் அஹ்மது, வெல்பேர் பார்ட்டி ஆஃப் இந்தியா தலைவர் திரு.S.N.சிக்கந்தர், இந்திய தேசிய லீக் பொதுச் செயலாளர் திரு.M.G.K.நிஜாம், மறுமலர்ச்சி முஸ்லீம் லீக் தலைவர் திரு.அச.உமர்பாரூக், தமிழ்நாடு முஸ்லீம் தொண்டு இயக்கம் தலைவர் திரு.K.A.முகம்மது மன்சூர், சுன்னத் ஜமாஅத் ஐக்கிய பேரவை தலைவர் திரு.மேலை நாஸர், இஸ்லாமிய விழிப்புணர்வுக் கழகம் பொதுச் செயலாளர் திரு.G.M.தர்வேஷ் ரஷாத், ஜம்மிபத்துல் உலமாயே ஹிந்த் (மஹ்மூத் மதனி) பொதுச் செயலர் திரு. M.முஹம்மது மன்சூர், ஆல் இந்தியா மில் கவுன்சில் சார்பில் திரு.முனீர் மற்றும் ஐக்கிய சமாதானப் பேரவை பொதுச் செயலாளர் திரு.முஜிபுர் ரஹ்மான் ஆகியோர் உடனிருந்தனர்.

*******

வெளியீடு:-இயக்குநர், செய்தி-மக்கள்தொடர்புத்துறை, சென்னை-9
நாள்:- 28.11.2012.